தரம் 11 வரலாறு பாடப் புத்தகத்தில்

இடம்பெறும் படங்களும்

அவற்றுக்கான வினாக்களும்

ஆக்கம் :- திரு.நா.செல்வச்சந்திரன்

ஆசிரியர் - யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

அலகு 1

அலகு 2

அலகு 3

அலகு 4

அலகு 5

அலகு 6

அலகு 7

அலகு 8



1 படத்தில் காட்டப்படுவது எது?

நூல் நூற்கும் ஜெனி

2 இதனை கண்டுபிடித்தவர் யார்?

ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ்

3 இது எத்துறையோடு தொடர்புடையது?

நெசவு

4 இதனை எவ்வாறு இயக்கலாம்?

கைகளால்



1 படத்தில் காட்டப்படுவது எது?

நூல் நூற்கும் இயந்திரம் (விசைத்தறி)

2 இதனை கண்டுபிடித்தவர் யார்?

றிச்சாட் ஆக்ரைட்

3 இது எத்துறையோடு தொடர்புடையது?

நெசவு

4 இதனை எவ்வாறு இயக்கலாம்?

நீர் வலுவினால்



01 படத்தில் காட்டப்படுவது எது?

பாதுகாப்பு விளக்கு

02 இதனைக் கண்டுபிடித்தவர் யார்?

ஹம்பிறிடேவி

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

நிலக்கரி

04 இதன் உபயோகம் யாது?

சுரங்கத்தினுள் வெளிச்சத்தை ஏற்படுத்த



01 படத்தில் காட்டப்படுவது எது?

உருக்கு உற்பத்தி உலை

02 இதனைக் கண்:பிடித்தவர் யார்?

ஹென்றி பேஸ்மர்

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

இரும்புருக்கு

04 இதன் உபயோகம் யாது?

இரும்பிலுள்ள கழிவுகளை வெளியேற்றல்



01 படத்தில் காட்டப்படுவது எது?

நீராவியால் இயங்கும் இயந்திரம்

02 இதனைக் கண்:பிடித்தவர் யார்?

ஜேம்ஸ்வாட்

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

நிலக்கரி

04 இதன் சிறப்பு யாது?

அனைத்துக் கைத்தொழிலுக்கும் பயன்படுத்தலாம்.



01 படத்தில் காட்டப்படுபவர் யார்?

ஜோர்ஜ் ஸ்டிவன்சன்

02 இவருடைய கண்டுபிடிப்பு எது?

புகையிரத என்ஜின்

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

போக்குவரத்து

04 இவருடைய நாடு எது?

பிரித்தானியா



01 படத்தில் காட்டப்படுவது எது?

புகையிரத என்ஜின்

02 இதனைக் கண்:பிடித்தவர் யார்?

ஜோர்ஜ் ஸ்டிவின்சன்

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

போக்குவரத்து

04 இவரின் சிறப்பு யாது?

17 வயது வரை எழுத, வாசிக்கத் தெரியாதவராக இருந்தமை.



01 படத்தில் காட்டப்படுபவர் யார்?

அலெக்சாண்டர் கிரகம்பெல்

02 இவரது கண்டுபிடிப்பு யாது?

தொலைபேசி

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்புடையது?

தொடர்பாடல்

04 இவரது தாய்நாடு எது?

பிரித்தானியா



01 படத்தில் காட்டப்படுபவர் யார்?

5ம் வில்லியம்

02 இவர் எந்நாட்டின் மன்னன் ஆவார்?

ஒல்லாந்து

03 இவர் சரணடைந்த நாடு எது?

பிரித்தானியா

04 இவர் எழுதிய கடிதம் எது?

கியூ கடிதம்

05 இக்கடிதத்தோடு எந்நாட்டைக் கைப்பற்ற பிரித்தானியர் வருகை தந்தனர்?

இலங்கை



1 படத்தில் காட்டப்படுவது எது?

கியூ மாளிகை

2 இது காணப்படும் நாடு எது?

பிரித்தானியா

3 இங்கு இடம்பெற்ற முக்கிய நிகழ்வு எது?

கடிதம் எழுதப்பட்டமை

4 அதில் கையொப்பமிட்ட ஒல்லாந்து மன்னன் யார்?

5ம் வில்லியம்

5 அதனைப் பெற்று பிரித்தானியர் எந்நாட்டுக்கு வருகை தந்தனர்?

இலங்கை

6 அதனை ஏற்க மறுத்த ஒல்லாந்து ஆளுநர் யார்?

பன்எங்கள்பேர்க்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
2 இவரோடு தொடர்படைய இராசதானி எது?
கண்டி
3 இவர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்?
நாயக்க வம்சம்
4 இவரது இயற்பெயர் என்ன?
கண்ணுசாமி
5 இவர் இறந்த இடம் எது?
இந்தியாவின் வேலூர்
6 இவனை அரசனாக்கிய பிரதம பிரதானி யார்?
பிலிமத்தலாவ
7 இவரது மனைவி யார்?
ராணி ரங்கம்மா
8 அவரின் பணிகள் எவை?
தலதாமாளிகைக்கு அழகிய பத்திரிப்பு அமைத்தமை,
பாற்கடல் என்னும் தடாகத்தை அமைத்தமை



1 படத்தில் காட்டப்படும் உருவம் யாருடையது?
கெப்பட்டிப்பொல திசாவை
2 இவரோடு தொடர்புடைய போராட்டம் எது?
1818 முதலாவது சுதந்திரப் போராட்டம்
3 இவரோடு தொடர்படைய கலவரம் ஆரம்பமான இடம் எது?
ஊவா வெல்லஸ
4 இவரால் மன்னராக பிரகடனப்படுத்தப்பட்டவர் யார்?
துரைசாமி
5 இவர் எந்த ஐரோப்பிய இனத்தவருக்கு எதிராகப் போராடினார்?
பிரித்தானியர்



1 படத்தில் காட்டப்படுவது எது?
நினைவுச் சின்னம்
2 இது அமைக்கப்பட்டுள்ள இடம் எது?
மெதமஹநுவர
3 அதனோடு தொடர்புடைய மன்னன் யார்?
ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
4 அவர் ஆட்சி செய்த இராச்சியம் எது?
கண்டி
5 இது எதற்காக அமைக்கப்பட்டது?
ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கைது செய்யப்பட்டதன் நினைவாக



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
மீகெட்டுவத்த குணானந்த தேரர்
2 இவர் கையாண்ட உத்தி எது?
விவாதங்களில் ஈடுபடல்
3 அவற்றில் பிரபல்யமானது எது?
பாணந்துறை
4 அதனால் கவரப்பட்டு இலங்கை வந்த அமெரிக்கர் யார்?
ஹென்றி ஸ்டில்ஒல்கொட்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
ஹென்றி ஸ்டில்ஓல்கொட்
2 இவர் எந்த மதத்திற்காகப் பாடுபட்டார்?
பௌத்தம்
3 இவரது தாய் நாடு எது?
ஐக்கிய அமெரிக்கா
4 இவர் வருகை தந்தமைக்கான காரணமான விவாதம் எது?
பாணந்துறை விவாதத்தால் கவரப்பட்டு
5 இவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு எது?
பௌத்த பிரம்மஞானசங்கம்
6 இவரது பங்களிப்போடு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள்?
கொழும்பு ஆனநத்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜாக் கல்லூரி
7 இவரால் ஆற்றப்பட்ட சேவைகள் எவை?
- வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை நாளாகப் பெற்றுத் தந்தமை.
- பௌத்த கொடி உருவாக்கத்தில் பங்களித்தமை



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
அநகாரிக தர்மபாலா
2 இவரோடு தொடர்படைய மதம் எது?
பௌத்தம்
3 இவரால் அமைக்கப்பட்ட சங்கம் எது?
மகாபோதி சங்கம்
4 இவர் வெளியிட்ட பத்திரிகை எது?
சிங்கள பௌத்தயா
5 இவர் இந்தியாவில் உள்ள எந்நகரை பாதுகாக்கப் பாடுபட்டார்?
புத்தகாயா
6 இவர் எப்பெயரில் துறவு பூண்டார்?
ஸ்ரீ தேவமித்த
7 இவர் இலங்கையில் இடம்பெற்ற எப்பணியோடு தொடர்புடையவர்?
தேசப்பற்றை வளர்க்கும் இயக்கம்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
2 இவர் எந்த மத மறுமலர்ச்சியுடன் தொடர்புடையவர்?
இந்து
3 இவரால் தொடங்கப்பட்ட பத்திரிகை எது?
உதயபானு
4 இவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை எது?
வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
5 இவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்புக்கள் எவை?
சைவபரிபாலன சபை, இந்து கல்விச்சபை
6 இவரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று தேசிய பாடசாலையாக உள்ளது எது? யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
7 இவரது சீடர்களால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை எது?
இந்து சாதனம்
8 இவரால் சமயத்தை வளர்க்க தொடக்கி வைக்கப்பட்ட உத்தி முறை எது? பிரசங்கம்

1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
சேர்.பொன்.இராமநாதன்
2 இவரின் சிறப்பு யாது?
கல்வி கற்ற இலங்கையர் சார்பில் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டவர்
3 இவரால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் எவை?
இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி
4 இவர் எக்கலவரத்தின் போது கைதுசெய்யப்பட்ட சிங்களத தலைவர்களை விடுவிக்கப்பாடுபட்டார்.?
1915 சிங்கள – முஸ்லிம் கலவரம்
5 இவர் எம்மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டார்?
இந்து



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

சேர்.பொன்.அருணாச்சலம்

2 இவர் 1917ல் ஆற்றிய உரையின் தலைப்பு எது?

எமது அரசியல் தேவை

3 இவர் எதன் முதலாவது தலைவராக விளங்கினார்?

இலங்கை தேசிய சங்கம்

4 1921இல் அவ்வமைப்பில் இருந்து வெளியேறி இவருள்ளிட்ட தமிழ் தலைவர்கள் உருவாக்கிய அமைப்பு எது?

தமிழர் மகாசபை



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

அறிஞர் சித்திலெப்பை

2 இவரோடு தொடர்புடைய மதம் எது?

இஸ்லாம்

3 இவர் ஆரம்பித்த பாடசாலை எது?

மருதானை சாஹிராக் கல்லூரி

4 இவரால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் எவை?

முஸ்லிம்நேசன், ஞானதீபம்

5 இவரால் ஆரம்பிக்கப்பட்ட சமயப் பாடசாலைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

மத்ரஸா

6 முஸ்லிம்களுடைய கல்வியை முன்னெடுக்க இவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு எது?

முஸ்லிம் கல்விச்சபை



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

ஜேம்ஸ்பீரிஸ்

2 இவர் எது தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தார்?

அரசியல் சீர்திருத்தம்

3 அவர் கோரிக்கைகளை முன்வைத்த ஆண்டு எது?

1908

4 இவர் தனது கோரிக்கைகளை யாரிடம் கையளித்தார்?

குடியேற்ற நாட்டுச் செயலாளர்(குறூ பிரபு)

5 அதன் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு எது?

குறு மக்கலம் சீர்திருத்தம்



01 படத்தில் இருப்பவர் யார்?

டி.பி.ஜெயதிலக

02 இவர் கடமையாற்றிய பாடசாலை எது?

கொழும்பு ஆனாந்தாக் கல்லூரி

03 இவரால் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

பௌத்த இளைஞர் சங்கம்

04 இவர் டொனமூர் யாப்பின் எக்குழுவின் தலைவராக இருந்தார்?

உள்நாட்டு அலுவல்கள்

05 இவர் ஸ்தானிகராக கடமையாற்றிய நாடு எது?

இந்தியா

06 இவரது முக்கிய கூற்று எது?

என்னுடைய நோக்கம் தாய் நாட்டுக்குச் சேவை செய்வதே தவிர புகழ் தேடுவதல்ல.



01 படத்தில் இருப்பவர் யார்?
மகாத்மா காந்தி

02 இவர் எந்த நாட்டின் விடுதலைக்காக போராடினார்?
இந்தியா

03 இப்பட்டத்தை வழங்கியவர் யார்?
ரவீந்திரநாத் தாகூர்

04 இவர் எழுதிய நூல் எது?
சத்தியசோதனை

05 இவருடைய போராட்ட முறை எது?
அகிம்சை

06 இவர் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு எது?
1927



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா

2 இவர் அங்கம் வகித்த கட்சி எது?
லங்கா சமசமாஜக் கட்சி

3 அக்கட்சி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1935

4 அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
இடதுசாரிகள்

5 இவர்கள் பிரசார முறையாக பயன்படுத்திய இயக்கம் எது?
சூரியமல் இயக்கம்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
கலாநிதி என்.எம்.பெரேரா

2 இவர் ஆரம்பித்த கட்சி எது?
லங்காசமசமாஜக் கட்சி

3 அக்கட்சி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1935

4 அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
இடது சாரிகள்

5 இவர்கள் பிரசார முறையாக பயன்படுத்திய இயக்கம் எது?
சூரிய மல் இயக்கம்



01 படத்தில் இருப்பவர் யார்?
டி.எஸ்.சேனநாயக்கா

02 இவரால் உருவாக்கப்பட்ட கட்சி எது?
ஐக்கிய தேசியக் கட்சி

03 இவர் வகித்த பதவி எது?
பிரதமர்

04 இவர் டொனமூர் யாப்பில் எக்குழுவின் தலைவராக இருந்தார்?
காணியும் விவசாயமும்

05 இவருடைய நூல் எது?
விவசாயமும் தேசத்தின் நீர்வளமும்

06 இவரின் சிறப்பு யாது? இலங்கையின் முதலாவது பிரதமர்

07 இவரால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்குத் திட்டம் எது?
கல்லோயா

பொருத்தமான படங்கள் இல்லை



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

வில்லியம் கோபல்லாவ

2 இவர் வகித்த பதவி எது?

பெயரளவு ஜனாதிபதி

3 அப்பதவி எத்தனையாம் ஆண்டு யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது?

1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு

4 இதற்கு முன்னர் இவர் வகித்த பதவி எது?

ஆளுநர் நாயகம்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

2 இவர் வகித்த பதவி எது?

நிறைவேற்று ஜனாதிபதி

3 இவரின் சிறப்பு யாது?

இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி

4 இவரது ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட யாப்பு எது?

1978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

5 அவர் 2ம் உலக மகாயுத்தத்தில் பாதிக்கப்பட்ட எந்நாட்டிற்கு சாதகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டார்?

ஜப்பான்

6 இவரால் ஆரம்பிக்கப்பட்ட பலநோக்கு திட்டம் எது?

மகாவலி அபிவிருத்தி திட்டம்



1 படத்தில் காட்டப்படுவது எது?

கொத்மலை நீர்த்தேக்கம்

2 இது எந்நதியின் கிளைநதியில் அணைகட்டி உருவாக்கப்பட்டது?

கடதொர

3 இக்கிளைநதியின் பெயர் யாது?

கொத்மல ஓயா

4 இதற்கு உதவி வழங்கிய நாடு எது?

சுவீடன்

5 இது எத்தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது?

நீர் மின் உற்பத்தி



1 படத்தில் காட்டப்படுவது எது?
விக்டோரியா நீர்த்தேக்கம்

2 இது எந்நதிக்கு குறுக்காக அணைகட்டி உருவாக்கப்பட்டது?
மகாவலிகங்கை

3 இதன் பிரதான நோக்கம் யாது?
மின்னுற்பத்தி

4 இதற்கு உதவி வழங்கிய நாடு எது?
பிரித்தானியா



1 படத்தில் காட்டப்படுவது எது?
ரந்தெனிகல நீர்த்தேக்கம்

2 இது எந்நதியில் அமைக்கப்பட்டுள்ளது?
மகாவலிகங்கை

3 இதன் நோக்கம் யாது?
மின்னுற்பத்தியும் நீர்ப்பாசனமும்

4 இதனுடன் இணைந்த மற்றைய நீர்த்தேக்கம் எது?
ரன்தம்பே

5 இவற்றுக்கு உதவி வழங்கிய நாடு எது?
மேற்கு ஜேர்மனி



1 படத்தில் காட்டப்பட்டுள்ளது எது?
உச்ச நீதிமன்றம்

2 இது அமைந்துள்ள இடம் எது?
கொழும்பு

3 இதன் தலைவர் யார்?
பிரதம நீதியரசர்

4 இவற்றில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை எத்தனை?
6 – 10

5 இவற்றின் பணிகள் எவை?
- ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் குற்றப் பிரேரணை தொடர்பாகப் பரிசிலித்தல்
- தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரித்தல்
- பாராளுமன்றத்தின் வரப்பிரசாதங்கள் மீறப்படல் தொடர்பான வழக்குகளை விசாரித்தல்



1 படத்தில் காட்டப்படுவது எது?
வேர்செயில்ஸ் மாளிகை

2 இது எந்நாட்டில் அமைந்துய்யது?
பிரான்ஸ்

3 இங்கு வாழ்ந்தவர்கள் யார்?
பூர்பன் அரச வம்சத்தினர்

4 இங்கு காணப்படும் முக்கிய அம்சங்கள் எவை?
நீர்வீழ்ச்சி, நீர்ப்பூங்கா, மலர்ப்பூங்கா



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

டொன்டெஸ்கியு

2 இவருடைய நாடு எது?

பிரான்ஸ்

3 இவர் எழுதிய நூல் எது?

சட்டத்தின் சாரம்

4 இவருடைய கருத்துக்கள் எந்நாட்டின் புரட்சிக்கு உதவியது?

பிரான்ஸ்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

ஜீன்ஜக்ஸ் ரூசோ

2 இவருடைய நாடு எது?

பிரான்ஸ்

3 இவர் எழுதிய நூல் எது?

சமூக ஒப்பந்தம்

4 இவருடைய கருத்துக்கள் எந்நாட்டின் புரட்சிக்கு உதவியது?

பிரான்சிய புரட்சி



1 படத்தினால் காட்டப்படுவது எது?

பஸ்டில் சிறைச்சாலை

2 இது காணப்படம் நாடு எது? பிரான்ஸ்

பிரான்ஸ்

3 இதனோடு தொடர்படைய புரட்சி எது?

பிரான்சியப் புரட்சி

4 இது எதற்காக பயன்படுத்தப்பட்டது?

அரசியல் எதிரிகளை அடைப்பதற்கு

5 இது எதன் அடையாளமாக விளங்கியது?

ஊழல் நிறைந்த ஆட்சியின் அடையாளமாக



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?

லெனின்

2 இவரோடு தொடர்படைய நாடு எது?

ரஸ்யா

3 இவருடைய புரட்சி வெற்றி பெற்ற ஆண்டு எது?

1917 ஒக்டோபர்

4 இவர் யாருக்கு எதிராகப் போராடினார்?

ஜார் மன்னர்களுக்கு எதிராக

5 இவருடைய பொருளாதாரக் கொள்கை எது?

சமவுடமை

6 இவரால் வெளியிடப்பட்ட பத்திரிகை எது?

தீப்பொறி

7 இவரின் சிறப்பு யாது?

முதலாவது சமவுடமை அரசைத் தோற்றுவித்தவர்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
16ம் லூயி

2 இவரோடு தொடர்புடைய நாடு எது?
பிரான்ஸ்

3 இவர் எவ் வம்சத்தைச் சேர்ந்தவர்?
பூர்பன்

4 இவரால் கூட்டப்பட்ட அந்நாட்டுப் பாராளுமன்றம் எது?
ஸ்டேட்ஜெனரல்

5 இவர் வாழ்ந்த வசிப்பிடம் எது?
வேர்செயில்ஸ் மாளிகை

6 இவரது மனைவி யார்?
மேரி அன்டொயினட்

7 இவரது காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வு எது?
பிரான்சியப் புரட்சி

8 அதனோடு தொடர்புடைய சுலோகம் எது?
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
ஓட்டோமான் பிஸ்மார்க்

2 இவரோடு தொடர்படைய நாடு எது?
ஜேர்மனி

3 இவரது முக்கிய பணி யாது?
ஜேர்மனியை ஒன்று படுத்தியமை

4 இவரால் ஐரோப்பாவில் தனிமைப்படுத்தப்பட்ட நாடு எது?
பிரான்ஸ்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
2ம் வில்லியம் (கெய்சர் வில்லியம்)

2 இவரோடு தொடர்புடைய நாடு எது?
ஜேர்மனி

3 இவர் ஆட்சிக்கு வந்த ஆண்டு எது?
1887

4 இவரின் முக்கிய நோக்கம் யாது?
ஜேர்மன் பேரரசை உருவாக்கல்

5 இவரது நோக்கம் எவ் யுத்தம் இடம்பெறக் காரணமாகியது?
1ம் உலக மகா யத்தம்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
பிரான்சிஸ் பேர்டினனட்

2 இவர் எந்நாட்டின் இளவரசர் ஆவார்?
ஆஸ்திரியா

3 இவர் எந்நாட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்?
சேர்பியாவின் சரஜிவோ

4 அச்சம்பவம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
சரஜிவோ சம்பவம்

5 இச்சம்பவம் எத்தனையாவது உலக மகா யுத்தத்துடன் தொடர்புடையது?
முதலாம் உலக மகா யுத்தம்



1 படத்தில் காட்டப்படும் படம் எது?
லுசுத்தானியா கப்பல்

2 இது எப்போரோடு தொடர்புடையது?
முதலாம் உலக மகா யுத்தம்

3 இதில் எத்தனை பயணிகள் கொல்லப்பட்டனர்?
1098

4 இது எந்த நாட்டுக் கப்பல்?
ஐக்கிய அமெரிக்கா

5 இது தாக்கப்பட்ட பின் யுத்தத்தில் ஈடுபட்ட நாடு எது?
ஐக்கிய அமெரிக்கா

6 இதனை தாக்கி மூழ்கடித்த நாடு எது?
ஜேர்மனி

7 இது எந்தச் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது?
அத்திலாந்திக் சமுத்திரம்



1 படத்தில் காட்டப்படுபவர் யார்? அடோல்ப் ஹிட்லர்

2 இவருடன் தொடர்புடைய நாடு எது? ஜேர்மனி

3 அவரால் உருவாக்கப்பட்ட கட்சி எது? தேசிய சோசலிசக் கட்சி

4 இவர் எழுதிய நூல் எது? எனது போராட்டம்

5 இவரால் ஜேர்மனியில் பரப்பப்பட்ட சர்வாதிகாரம் எது? நாஸிசம்

6 இவரது குறியீடு எது? சுவஸ்டிகா

7 இவரோடு தொடர்புடைய யுத்தம் எது? 2ம் உலக மகா யுத்தம்

8 இவரது தாய் நாடு எது? ஆஸ்திரியா

9 இவர் எந்நாட்டின் மீது படையெடுத்தமையால் தீர்க்கமான தோல்வி ஏற்பட்டது? ரஸ்யா

10 இவரால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் எவை?
எஸ்.எஸ். இராணுவம், கெஸ்டபோ எனப்படும் இரகசிய பொலிஸ்

11 இவர் எந்நாட்டின் மீது படையெடுத்தமை உலக மகா யுத்தம் ஏற்படுவதற்கான உடனடிக் காரணமாக அமைந்தது?
போலந்து



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
பெனிட்டோ முசொலினி

2 இவரோடு தொடர்படைய நாடு எது?
இத்தாலி

3 இவரால் உருவாக்கப்பட்ட படையணி எது?
கபிலச் சட்டைப் படையணி

4 இவரால் இத்தாலியில் பரப்பப்பட்ட கொள்கை எது?
பாஸிசம்

5 இவரோடு நட்புக் கொண்டிருந்த ஜேர்மனியின் ஆட்சியாளர் யார்?
அடோல் ஹிட்லர்

6 இவரால் சர்வதேச விதிமுறைகளை மீறி ஆக்கிரமிக்கப்பட்ட நாடு எது? அபிசினியா



1 படத்தில் காட்டப்படுபவர் யார்?
வின்சன் சேர்ச்சில்

2 இவரோடு தொடர்புடைய நாடு எது?
பிரித்தானியா

3 இவர் வகித்த பதவி எது?
பிரதமர்

4 இவர் அப்பதவி வகித்த காலப்பகுதி எது?
2ம் உலக மகா யுத்தம்

5 இவர் எந்த நாட்டுடன் சக்தி வாய்ந்த தொடர்பினைக் கொண்டிருந்தார்? ஐக்கிய அமெரிக்கா

6 இவரின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட அமைப்பு எது?
ஐக்கிய நாடுகள் சபை



1 படத்தில் காட்டப்படுவது எது?

சர்வதேச நீதிமன்றம்

2 இது அமைந்துள்ள நகரம் எது?

ஹேக் நகரம்

3 இது அமைந்துள்ள நாடு எது?

நெதர்லாந்து

4 இதில் பணியாற்றும் நீதிபதிகள் எத்தனை?

9

5 அவர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

15

6 இதன் முக்கிய பணி எது?

- ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு நிறுவனங்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குதல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே எழும் சிக்கல்களை விசாரித்தல்





நன்றி



